மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், 15 விவசாய மோட்டார்களும் ஆகிய மின் இணைப்புகள் மட்டுமே உள்ளன. மேற்கண்ட மின் இணைப்புகளுக்கு உரிய மின் பகிர்வுக்குப் போதுமான திறனுடைய 100 கே.வி.ஏ. மின்மாற்றி நத்தம் கிராமத்தில் அமைக்கப்பட்டு, மேற்கண்ட கிராமத்தில் சீரிய முறையில் கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவு சங்கத்தால் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற அளவிலே இருக்கிறது. தேவைப்பட்டால் மாற்றி அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**15**—

**பதவி உயர்வு**

***24538—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கல்வித் தகுதிகொண்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவி மின் பொறியாளர்/மின்னியல் பதவி உயர்வு மறுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கல்வித் தகுதி கொண்ட தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவி மின் பொறியாளர்/மின்னியல் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

(ஆ) உதவிப் பொறியாளர் பதவி நியமனம் பணி மூப்பு அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2002 அக்டோபர் 25]

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்து வந்த தமிழக மின்சாரத் துறையைச் சீரமைத்துவரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. எப்பொழுது முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது? தற்போது காலியாகவுள்ள அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளனவா? இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் தகுதி கொண்ட தொழில்நுட்ப உதவியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் தற்போது 463 பேர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, அனைவருமே பதவி ஏற்பு செய்துவிட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. டி.என். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**16—**

**பிளாஸ்டிக் ஆலை**

***9787—திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி உபயோகம் மற்றும் எரித்தலின்போது வெளியாகும் டையாக்சினால் புற்று நோய் மற்றும் இதர நோய்கள் வர வழியாகிறது என சுற்றுச்சூழல் வாரியம் தெரிவித்துள்ளதால், கடலூரில் கெம்ப்ளாஸ்ட் சன்மார் கம்பெனி பி.வி.சி. உற்பத்தி செய்யும்பொருட்டு பெரிய ஆலையைத் தொடங்க வழங்கப்பட்ட ஒப்புதலை நிறுத்த அரசு ஆவன செய்யுமா?